| | |
|---|---|
| TNVR13000079<br>2023 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஜெ.செல்வன் ஜேசு ராஜா, எம்.ஏ.,எல்எல்.எம்.,<br>சார்பு நீதிபதி,<br>2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் புதன்கிழமை<br>I.A.No.1/2023 in O.S.No.28/2023 |

கவுல்ராஜேந்திரன் ... மனுதாரர்/1 ம் பிரதிவாதி

–எதிரிடை–

முத்துமணிகண்டன் . .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 15.07.2024 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டு வரப்பட்டபோது, மனுதாரர்/1 ம் பிரதிவாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.T.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மோகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## உத்தரவு

மனுதாரர் / 1 ம் பிரதிவாதியையும், எதிர்மனுதாரர் /வாதியையும் சென்னையில் இருக்கும் Director of Forensic Laborator, Tamil Nadu Forensic Laboratory, Mylapore, Chennai – 4 என்ற விலாசத்திற்கு மனுதாரரையும். எதிர்மனுதாரரையும் ஒரு நீதிமன்ற ஆணையர் மூலம் அழைத்துச் சென்று அவர்கள் இரத்த மாதிரிகளை எடுத்து DNA பரிசோதனை செய்ய உத்தரவிட்டு, அதன் விரிவான அறிக்கையை நீதிமன்ற ஆணையர் மூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தோதாக நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக் கோரி CPC Order 26 Rule 10–a & 26 Rule 9 and Section 151 CPC–ன் படி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:

மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் / வாதி தன்னை மனுதாரர் / 1 ம் பிரதிவாதியின் மகன் என்று கோரி மனுதாரரின் சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல்

செய்துள்ளார். அந்த வழக்கிற்கு மனுதாரர் விரிவாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் பிறவியிலேயே குள்ளமனிதனாக பிறந்துவிட்டார். மனுதாரருக்கு சொத்துக்கள் இருந்ததால் அந்த சொத்துக்கள் குடும்பத்தைவிட்டு போய்விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஒன்றுவிட்ட மனுதாரரின் தாய்மாமா மகளான நாணம்மாளை மனுதாரருக்கு பெயரளவிற்கு வற்புறுத்தி திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். ஆனால் ஒரு நாள் கூட மேற்படி நாணம்மாளுடன் குடும்பம் நடத்தவில்லை. நாணம்மாள் மனுதாரரைவிட உயரமாக சராசரி மனுஷியாக இருந்ததால் மனுதாரருடன் குடும்ப வாழ்க்கை நடத்த ஒத்துவரவில்லை. மனுதாரரும் குடும்ப வாழ்க்கைக்கு லாயக்கு அல்லாதவனாகவே இருந்துவிட்டார். நாணம்மாள் வேறு நபருடன் தகாத வாழ்க்கை வாழ்ந்து எதிர்மனுதாரை பெற்றார். எதிர்மனுதாருக்கு வேண்டுமென்றே மனுதாரரின் பெயரை தகப்பனாராக காண்பித்து பெயரளவிற்கு ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டனர். மனுதாரர் இயலாமையில் இருந்ததால் மனுதாரரை பலமுறை எதிர்மனுதாரர் அடித்து இம்சை செய்து சில பத்திரங்களில் கையெழுத்தும் வாங்கிவிட்டார். எதிர்மனுதாருடைய சொல்படி மனுதாரர் நடக்காவிட்டால் மனுதாரருக்கு அடி உதை விழும். மீதியிருந்த தாவாச் சொத்துக்களையும் விற்பனை செய்ய வரவேண்டுமென்று மனுதாரரை அடித்து இம்சை செய்தார். மனுதாரர் தன்னுடைய அவசியமான செலவிற்காக சில சொத்துக்களை கிரையம் கொடுத்திருக்கிறார். அதனால் எதிர்மனுதாரர் மனுதாரர்மீதும், மனுதாரரிடம் கிரையம் பெற்றவர்கள்மீதும் பாகபிரிவினை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

(ii) இந்த வழக்கில் மனுதாரரின் முக்கிய கட்சியே எதிர்மனுதாரர் மனுதாரரின் மகன் இல்லை என்பதுதான். அதனால் அந்த கட்சியை நிரூபிப்பதற்கு மனுதாரரின் இரத்த மாதிரியையும், எதிர்மனுதாரரின் இரத்த மாதிரியையும் எடுத்து தகுந்த நிபுணர் மூலம் பரிசோதனை செய்தால் DNA பரிசோதனைக்கு உட்படுத்தினால் உண்மைநிலை தெரிய வரும். அப்படிக்கு இல்லையேல் வாய்மொழி சாட்சியங்கள் ஏற்படக்கூடும். அதனால் வீண்காலவிரையமும் ஏற்படும். அவ்விதம் அனுப்பி கருத்து பெறுவதற்கு எதிர்மனுதாரர் ஆட்சேபணை செய்வதற்கு சட்டத்தில் இடம் இல்லை. அவ்விதம் இரத்த

மாதிரிகள் எடுத்து தகுந்த நிபுணருக்கு அனுப்பி கருத்து பெறுவதற்கு உரிய கட்டணத்தை மனுதாரர் செலுத்த தயாராகவும் இருக்கிறார். மனுதாரருக்கு வயதாகிக் கொண்டே போவதால் உடல்நிலையிலும் பாதிப்பு ஏற்பட்டு கொண்டே இருக்கிறது. எனவே மனுதாரர் உயிருடன் இருக்கும்போதே இந்த DNA பரிசோதனையை நடத்தி முடிக்க உத்தரவிட வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

(iii) எனவே, சென்னையில் இருக்கும் Director of Forensic Laboratory, Tamil Nadu Forensic Laboratory, Mylapore, Chennai – 4 என்ற விலாசத்திற்கு மனுதாரரையும், எதிர்மனுதாரரையும் ஒரு நீதிமன்ற ஆணையர் மூலம் அழைத்து சென்று அவர்கள் இரத்த மாதிரிகளை எடுத்து DNA பரிசோதனை செய்ய உத்தரவிட்டு, அதன் விரிவான அறிக்கையை நீதிமன்ற ஆணையர் மூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத்தோதாக நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டும்.

3. <u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் குறிப்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயங்களைத் தவிர இதர விஷயங்கள் யாவும் உண்மைக்கு புறம்பானவை என்றும் கற்பனையானவை என்றும் புரட்டானவை என்றும் மறுக்கப்படுகிறது. மேற்படி மனுதாரர் / 1ம் பிரதிவாதி இம்மனுவில் உண்மை விவரங்களை மறைத்து வேண்டுமென்றே எதிர்மனுதாரின் பிறப்பு பற்றிய விவரங்களை தவறாக வெளியிட்டுள்ளார். எதிர்மனுதாரின் தந்தை என்ற வகையில் மனுதாரர் சுமார் 55 ஆண்டுகள் வாழ்ந்து வந்த நிலையில் தற்போது எதிர்மனுதாரர் தனக்கு பிறக்கவில்லை என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. மேலும் எதிர்மனுதாரின் பள்ளி மாற்று சான்றிதழிலும் மனுதாரரே தந்தையாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் எதிர்மனுதாரர் கைவசம் உள்ள அனைத்து விதமான அரசு, வருவாய் ஆவணங்களிலும் மனுதாரரை தந்தை என்றும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பதிவுகளை ஆட்சேபித்து இன்றுவரை மனுதாரர் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் மனுதாரும் எதிர்மனுதாரும் கடந்த 07.05.1984 ல் வெண்ணிலையாக ஒரு பாகவிஸ்தி பத்திரமும் எழுதிக் கொண்டுள்ளார்கள். மேற்படி பாகவிஸ்தி பத்திரத்திலும் மனுதாரர்,

எதிர்மனுதாரை தனது மகன் என்றே குறிப்பிட்டுள்ளார். மேற்படி மனுதாரர் எப்போதும் எதிர்மனுதாரை வித்தியாசப்படுத்தி பார்த்தது கிடையாது. மேற்படி மனுதாரர் தற்போது 2ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில்தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரை நேரில் விசாரித்தால் வைஷ உண்மை தெரியவரும். கடந்த 55 ஆண்டுகளாக மனுதாரும், எதிர்மனுதாரும் தந்தை மகனாக வாழ்ந்து வந்த நிலையில் தற்போது தாக்கல் செய்துள்ள இம்மனு பின்யோசனையின் பேரில் தாக்கல் செய்யப்பட்டதாகும். இம்மனு தேவையற்ற ஒன்றாகும். இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாய் உள்ளது. எனவே மனுதாரர் / 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை எதிர்மனுதாரர் / வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும்.

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

5. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர் / வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்நிலையில், 1ம் பிரதிவாதிதரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோதே, எதிர்மனுதாரர் / வாதி தன்னுடைய மகன் இல்லை எனவும், அதை நிரூபிக்கும் பொருட்டு மனுதாரர் / 1ம் பிரதிவாதியையும் எதிர்மனுதாரர் /வாதியையும் சென்னையில் இருக்கும் Director of Forensic Laborator, Tamil Nadu Forensic Laboratory, Mylapore, Chennai – 4 என்ற விலாசத்திற்கு மனுதாரரையும். எதிர்மனுதாரரையும் ஒரு நீதிமன்ற ஆணையர் மூலம் அழைத்துச் சென்று அவர்கள் இரத்த மாதிரிகளை எடுத்து DNA பரிசோதனை செய்ய உத்தரவிட்டு. அதன் விரிவான அறிக்கையை நீதிமன்ற ஆணையர் மூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தோதாக நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் எனக் கோரி மனுதாரர் / 1ம் பிரதிவாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரின் பள்ளி மாற்று சான்றிதழில் மனுதாரரே தந்தையாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மேலும்

எதிர்மனுதாரர் கைவசம் உள்ள அனைத்து விதமான அரசு, வருவாய் ஆவணங்களிலும் மனுதாரரை தந்தை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது எனவும், மேற்படி பதிவுகளை ஆட்சேபித்து இன்றுவரை மனுதாரர் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், மேலும் மனுதாரும் எதிர்மனுதாரும் கடந்த 07.05.1984 ல் வெண்ணிலையாக ஒரு பாகவிஸ்தி பத்திரமும் எழுதிக் கொண்டுள்ளதாகவும், மேற்படி பாகவிஸ்தி பத்திரத்திலும் மனுதாரர், எதிர்மனுதாரை தனது மகன் என்றே குறிப்பிட்டுள்ளார் எனவும், மனுதாரர் தற்போது 2 ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் தான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் எனவும் எதிர்மனுதாரர் / வாதிதரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் மனுவினை மறுத்து ஆட்சேபணை செய்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தபோதிலும், மனு விசாரணையின்போது, மனுதாரரும், எதிர்மனுதாரரும் இந்நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி மனுதாரர் கோரியுள்ள DNA பரிசோதனை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

7. எனவே, மனுதாரரின் மனு, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி DNA பரிசோதனை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ள சங்கதி, ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.D.பாலசுப்பிரமணியன் அவர்கள் நியமிக்கப்படுகிறார். அவருக்கான நீதிமன்ற ஆணையர் கட்டணம் ரூ. 10,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர் மனுதாரரின் மகன்தானா? என்பதை தீர்மானிக்க, நீதிமன்ற ஆணையர், மனுதாரரையும் எதிர்மனுதாரரையும், சென்னையில் இருக்கும் Director of Forensic Laborator, Tamil Nadu Forensic Laboratory, Mylapore, Chennai – 4 என்ற விலாசத்திற்கு அழைத்துச் சென்று மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் இரத்த மாதிரிகளை எடுத்து DNA பரிசோதனை செய்ய உட்படுத்தி, Director of Forensic Laboratory, Tamil Nadu Forensic Laboratory, Mylapore, Chennai – 4 அலுவலகத்திலிருந்து, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை DNA பரிசோதனை செய்ததற்கான அறிக்கையைப் பெற்று, மேற்படி அறிக்கையை 28.08.2024 ம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர், எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்

ஆகியோரின் போக்குவரத்து செலவு, தங்கும் செலவு மற்றும் சாப்பாடு செலவு ஆகியவற்றை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்த பின்னர், என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 24 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை.
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை.

J SELVAN JESU RAJA

Digitally signed by J SELVAN JESU RAJA

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
I.A.No.1/2023 in O.S.No.28/2023
உத்தரவு நாள் –24.07.2024